### தேர்தல் செயல்முறை சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும்!

# இ.வி.எம். செயல்முறை குறித்த முழுமையான வெளிப்படைத் தன்மை வேண்டும்!

## மாநிலங்களவையில் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ வலியுறுத்தல்!



புதுடெல்லி, டிச.12-

மாநிலங்களவையில் தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்த விவாதத்தில் மாநிலங்களவை உறுப்பினர் மூத்த வழக்கறிஞர் என். ஆர்.இளங்கோ பேசியதாவது:-

தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்த விவாதத்தில் நாடாளுமன்ற மாநிலங்களவையில் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ பேசியதாவது:-

தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்து நாடாளுமன்றத்தில் முக்கியமான விவாதம் நடைபெறுகிறது. இந்திய அரசியலமைப்பின் பகுதி XV, மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1950 & 1951, தேர்தல் நடத்தை விதிகள் 1961, மற்றும் வாக்காளர் பதிவு விதிகள் 1960 ஆகியவற்றின் அடிப்படையில் இந்த விவாதம் முன்வைக்கப்பட்டது.

**மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள்**

2024--ல் அனைத்து இயந்திரங்களும் M3 (மூன்றாம் தலைமுறை) இயந்திரங்களாக மாற்றப்பட்டுள்ளன. M3 EVMகளில், வாக்குச்சீட்டு அலகு VVPAT-உடன் இணைக்கப்பட்டு, பின்னர் VVPAT கட்டுப்பாட்டு அலகுடன் இணைக்கப்படுகிறது. வாக்குச்சீட்டு அலகிற்கும் கட்டுப்பாட்டு அலகிற்கும் இடையே நேரடி இடைமுகம் இல்லை என்பது கவலைக்குரிய விஷயமாகும்.

**சின்ன ஏற்றுதல் அலகு பற்றிய கவலைகள்**

வேட்புமனு திரும்பப் பெறுவதற்கான கடைசி தேதிக்குப் பிறகும் வாக்குப் பதிவு தேதிக்கு முன்பும் VVPAT-ல் ஒரு மைக்ரோசிப் செருகப்படுகிறது. இந்த 'சின்ன ஏற்றுதல் அலகு' (SLU) செயல்முறையில் எந்த அரசியல் கட்சியும் பங்கேற்க அனுமதிக்கப்படுவதில்லை. SLU-வின் கலவை, வேலை செய்யும் முறை, செயல்படும் தரவு ஆகியவை அரசியல் கட்சிகளுக்கு அல்லது வேட்பாளர்களுக்கு வெளிப்படுத்தப்படவில்லை.

**சிக்மா நிலை குறித்த தவறான தகவல்**

ECI இணையதளத்தில் 99.993% நம்பிக்கை நிலை என்று குறிப்பிடப்பட்டுள்ளது தவறாக வழிநடத்துவதாக உள்ளது. 4 சிக்மா நிலை மில்லியனுக்கு 6200 குறைபாடுகள் கொண்டது, இது 99.379% நம்பிக்கை நிலை மட்டுமே. இந்த தவறான அறிக்கை தேசத்தின் ஜனநாயகத்தையே அசைத்துப் பார்க்கிறது.

**சிறப்பு தீவிர திருத்தம் (SIR)**

நடைமுறை சிரமங்கள்

SIR-க்கான காலக்கெடு நியாயமற்றது

BLO-க்கள் தயாராக இல்லை, சரியான பயிற்சி வழங்கப்படவில்லை

படிவங்கள் சரியான நேரத்தில் அச்சிடப்படவில்லை

ஆதார் கட்டாயமில்லை என்றாலும், ECI 11 கூடுதல் ஆவணங்களை கோருகிறது

புகைப்படம் ஒட்டுவது அனைவருக்கும் எளிதானது அல்ல

தமிழ்நாட்டில் லட்சக்கணக்கான வாக்குகளை இழக்க நேரிடலாம்

**சட்டபூர்வத்தன்மை குறித்த கவலை**

SIR-ன் பெயரில் தேர்தல் ஆணையம் செய்வது மக்களின் குடியுரிமையை சரிபார்ப்பதாகும். ஒவ்வொரு வாக்காளரையும் தனது குடியுரிமையை நிரூபிக்கும்படி கேட்கிறது - அந்த அதிகாரம் ECI-க்கு வழங்கப்படவில்லை. டாக்டர் B.R. அம்பேத்கர் அரசியலமைப்பு ஒழுக்கத்தின் தேவையை வலியுறுத்தினார்.

**கோரிக்கைகள்**

**வெளிப்படைத்தன்மை:** EVM செயல்முறை குறித்த முழுமையான வெளிப்படைத்தன்மை

**பொறுப்புணர்வு:** தேர்தல் ஆணையத்தின் செயல்களுக்கு முழுமையான பொறுப்புணர்வு

**முறையற்ற பயன்பாடு தடுப்பு:** வாக்கு பதிவு இயந்திரங்களை முறையற்ற வழியில் பயன்படுத்துவது சாத்தியமற்றதாக ஆக்கப்பட வேண்டும்

புள்ளியியல் நிகழ்தகவு: கையாளுதலுக்கு எந்த சாத்தியமும் இல்லை என்ற முழுமையான உறுதி

சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்கள் நமது ஜனநாயகத்தின் அடித்தளமாகும். வாக்களிக்கும் உரிமை ஒவ்வொரு குடிமகனின் மிக அடிப்படையான உரிமையாகும். ஒரு மாநிலத்தில் லட்சக்கணக்கான வாக்காளர்கள் வாக்குரிமை இழக்கும் ஆபத்து எதிர்கொள்ளும் போது, இது நிர்வாக அசௌகரியத்தின் விஷயம் அல்ல - இது உருவாகும் அரசியலமைப்பு நெருக்கடியாகும்.

இந்திய மக்கள் EVM-ல் ஒரு பொத்தானை அழுத்தும்போது என்ன நடக்கிறது என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். இந்திய மக்கள் தங்கள் வாக்கு அவர்கள் எண்ணியவாறே பதிவு செய்யப்படுகிறது என்று உறுதியளிக்கப்பட வேண்டும். இந்திய மக்கள் தங்கள் பெயர்கள் அதிகார வர்க்கத்தின் மூலம் வாக்காளர் பட்டியல்களிலிருந்து நீக்கப்படாது என்று நம்பிக்கையாக இருக்க வேண்டும்.

நமது தேர்தல் செயல்முறையின் நேர்மை அனைத்து சந்தேகங்களுக்கும், அனைத்து கேள்விகளுக்கும் அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். நமது ஜனநாயகத்தை வலிப்படுத்த ஒன்றாக பணியாற்றுவோம்.

இவ்வாறு மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ உரையாற்றினார்.

### பாவலர் கடவூர் மணிமாறன் இயற்றிய

# 'தெற்கே முழங்கும் திராவிடம்' - கவிதைத் தொகுப்பு!

## பேராசிரியர் மா.செல்வராசன் தலைமையில் - திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் வெளியிடுகிறார்!

சென்னை, டிச. 12 -

பாவலர் கடவூர் மணிமாறன் இயற்றிய 'தெற்கே முழங்கும் திராவிடம்' கவிதைத் தொகுப்பினை பேராசிரியர் மா.செல்வ ராசன் தலைமையில் திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர்சுப.வீரபாண்டியன் வெளியிடுகிறார்!

அதன் விவரம் வருமாறு:

தனித்தமிழ் இயக்கத்தின் தனிச் சிறப்புப் பாவலர், பாவேந்தர் பாரதிதாசன் பெரும்பற்றாளர், தமிழகம் அறிந்த தலைசிறந்த கவிஞர்களுள் ஒருவர் கடவூர் மணிமாறன் எழுபது நூல்களுக்கு மேல் இயற்றியவர். அவரது 'தெற்கே முழங்கும் திராவிடம்' என்னும் கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா, சென்னை பெரியார் திடல் மணியம்மை அரங்கில் நாளை ( 13.12.2025 - சனிக்கிழமை) மாலை 6.30 மணிக்கு நடைபெற உள்ளது!

வெளியீட்டு விழாவிற்குச் சென்னைப் பல்கலைக்கழக இக்காலத் தமிழ் இலக்கியத் துறை மேனாள் தலைவர் பேராசிரியர் மா.செல்வராசன் தலைமை தாங்குகின்றார்.

கருவூர் மாவட்டத் திராவிடர் கழகத் தலைவர் ப.குமாரசாமி முன்னிலையில் திராவிடர் இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப. வீரபாண்டியன் நூலை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றுகின்றார்.

முதல் படியை மாநிலக் கல்லூரி மேனாள் தமிழ்ப் பேராசிரியர் கவிஞர் பொன்.செல்வ கணபதி பெற்றுக்கொண்டு உரையாற்றுகின்றார்.

மேலும் முனைவர் வி.பொ.பா.தமிழ்ப்பாவை, இரா.உமா, தி.பிரபு ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்

வெ.அறிவுக்கண்ணன் வரவேற்பு நல்க, முனைவர் கனிமொழி நிகழ்வுரை தர, இராம.சந்திரசேகரன் நன்றி நவில நூலாசிரியர் பாவலர் மணிமாறன் ஏற்புரையாற்றுகிறார்.

ஆர்வலர்கள் வருகை தருமாறு திராவிட இயக்கத் தமிழர் பேரவை அழைக்கின்றது.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 295 வது நாள்!

## எழும்பூர் வடக்கு பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!



சென்னை,டிச.12-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 295 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (11.12.2025), எழும்பூர் வடக்கு பகுதி: 1) வட்டம் 77, டிம்லாஸ் ரோடு, போலீஸ் ஸ்டேஷன் அருகில், 2) வட்டம் 78, ஐந்து விளக்கு, கொசப்பேட்டை, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத் தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், சொ.வேலு, வி.சுதாகர், பி.எம்.யாழினி, கோ. ஏகப்பன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, கே.எஸ்.எம்.நாதன், புனிதவதி எத்திராசன், கோ.மணி, நிர்மலாதேவி. மாமன்ற உறுப்பினர்கள்: B.சுமதி, ராஜேஸ்வரி ஸ்ரீதர், பரிதிஇளம்சுருதி, ஜி.தாமோதரன், எழும்பூர் வடக்கு தெற்கு பகுதி செயலாளர்கள்: வி. அபாய், தி.தயாளன், சு. மனோகர், ந.பாலு, ஆர்.எம். ரங்கநாதன், சி.சேகர், வி. விஜயகுமார், ஆர்.பாபு, டால்வின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன், எல்.சுந்தர்ராஜன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: எஸ். முரளி, ஆர்.ராஜன், கே.ஆர். அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக் குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### பனந்தோப்பு இரயில்வே காலனி அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளியில்

# மாணவ - மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

## ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. முன்னிலையில் மேயர் ஆர்.பிரியா வழங்கினார்!



சென்னை, டிச.12-

பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க. நகர் மண்டலம் வார்டு-74ல் பனந்தோப்பு இரயில்வே காலனி அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியருக்கு மேயர் ஆர்.பிரியா திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி முன்னிலையில் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் மேயர் பேசியதாவது:

முதலமைச்சர் அவர்கள் மாணவர்கள் கல்வி கற்க ஏதுவாக அதிக முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு திட்டங்களை கல்விக்காக செயல்படுத்தி வருகிறார்கள். மேலும் கல்வி ஒன்றே அழியாத செல்வம் என்று கூறி மாணவர்களுக்கு கல்வி மற்றும் உயர் கல்விக்கான திட்டங்களை வழங்கி, அடிப்படை கட்டமைப்பு வசதி ஏற்படுத்தியுள்ளார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளி மாணவ, மாணவியர் நெடுந்தூரம் சென்று கல்வி கற்கவும், குறிப்பிட்ட நேரத்தில் மற்றும் விடுப்பு எடுக்காமல் பள்ளிக்கு வருகை தரவும் உதவியாக இந்த விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி உள்ளார். முந்தைய காலக்கட்டத்தில் 2 கி.மீ., 5 கி.மீ., 10 கி.மீ., எல்லாம் நடந்து சென்று கல்வி பயின்று இன்று பலர் நல்ல நிலையில் உள்ளனர். அவ்வாறான கடினமான சூழலை மாற்றி இன்றைக்கு எளிய முறையில் பள்ளிக்கு வந்து கல்வி கற்கும் சூழலை தமிழ்நாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள்.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து வசதியும் செய்து கொடுத்துள்ளார்கள். இந்த மிதிவண்டிகளை பள்ளிக்கும் மட்டுமில்லாமல் சிறப்பு வகுப்புகள், கூடுதல் படிப்பிற்கான வகுப்புகள், அன்றாட தேவைகள் என்று யாரையும் சார்ந்திராமல் நீங்களே சென்று வர ஏதுவாக இந்த மிதிவண்டி மிகுந்த பயனுள்ளதாக இருக்கும்.

படிப்பது மட்டும் தான் உங்களுடைய வேலை. எந்த வித எதிர்பார்ப்பும் இல்லாமல் மகிழ்ச்சியாக இருக்கக் கூடிய பருவம் தான் இந்த மாணவப் பருவமாகும். மாணவர்கள் படிப்பிற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து நன்கு படித்திட வேண்டும். எந்த சூழ்நிலையிலும் கல்வி தான் நமக்கு கை கொடுக்கும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சொல்வார்கள். ஆகவே, நீங்கள் நன்றாகப் படித்து முன்னேறிட வேண்டும் என்று பேசினார்.

இந்நிகழ்வில் பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை கிழக்கு மாவட்டம் கொளத்தூர் கிழக்கு பகுதி,66 அ வட்டம், 85வது பாகக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆலோசனைகள் வழங்கி கூட்டத்தில் கலந்து கொண்ட நிர்வாகிகள் மற்றும் BLA 2, BDA, BLC ஆகியோரின் அலைபேசியிலும் இரு சக்கர வாகனத்திலும் தமிழ்நாடு தலைகுனியாது ஸ்டிக்கர் ஒட்டி உற்சாகப் படுத்தினார். இந்த பாகக் கூட்டங்களில் பகுதி செயலாளர்கள் ஐசிஎப்.வ. முரளிதரன்,எ. நாகராஜன் எம் சி,கே .எஸ். ரவிச்சந்திரன், கே. சந்துரு, சி. மகேஷ் குமார், சரிதா மகேஷ் குமார்.எம்.சி, ஊமைத்துரை மற்றும் பாகத்திற்குட்பட்ட நிர்வாகிகள், கழக முன்னாடிகள் செயல்வீரர்கள், BLA 2,BDA BLC ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### கோவையிலிருந்து உதகை வழியே மைசூர், பெங்களூருவில் அமையவுள்ள

# தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்திற்கு உடனே ஒப்புதல் தருக!

## ஒன்றிய அமைச்சரிடம் ஆ.ராசா எம்.பி. நேரில் வலியுறுத்தல்!



புதுடெல்லி, டிச. 12-

10 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ள கோவை - உதகை - மைசூர் - பெங்களூரு பகுதியில் அமையவுள்ள தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்திற்கு உடனே ஒப்புதல் வழங்கக் கோரி ஒன்றிய அமைச்சரிடம் மக்களவை கழகக் கொறடா ஆ.ராசா வலியுறுத்தினார்.

ஒன்றிய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்காரியை, தி.மு.க. மக்களவை கொறடா ஆ.ராசா நேரில் சந்தித்து வழங்கிய கடிதம் வருமாறு:-

கோவை மண்டலத்தில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ள சாலைத் திட்டங்கள் தொடர்பாக நான் ஏற்கனவே தங்களுக்கு எழுதிய கடிதத்தின் (2019 ஏப்.4) தொடர்ச்சிதான் இந்தக் கடிதம்.

தேசிய நெடுஞ்சாலை எண்.181 (கோவை - உதகை - குண்டல் பட்டு சாலை) தொடர்பாக சேலம் தேசிய நெடுஞ்சாலை பிரிவு ரூ.8698.88 லட்சத்தில் மதிப்பீடு செய்துள்ளது.(தனது 2025 - 26 ஆண்டு திட்டத்தில்) அது இந்திய தேசிய நெடுஞ்சாலை குழுமும் தனது திட்டத்தில் இணைத்துள்ளது என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

தேசிய நெடுஞ்சாலை 181 என்பது கோவை பைபாஸ் இடத்தில் புறப்பட்டு முக்கிய சுற்றுலா தலங்களான மேட்டுப்பாளையம், குன்னூர், உதகை, கூடலூர் வழியாக கர்நாடகாவில் உள்ள குண்டல்பட்டு வரை இருப்பதாகும்.

மைசூர், பெங்களூருக்கு உதகையிலிருந்து செல்வதற்கு இதுதான் குறைந்த தூர வழிப் பாதையாகும். மொத்தமுள்ள 108.4 கிலோ மீட்டர் தூரத்தில் 28.4 கி.மீ. சாலை பார்லையார் முதல் மரப்பாலம் வரையிலும், மீதமுள்ள தூரம் குன்னூரிலிருந்து ஃபிங்கர் போஸ்ட் வரையிலுமாகும். இது அந்த திட்ட அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தச் சாலையின் முக்கியத்துவம் குறித்து நீங்களும் நன்கு அறிவீர்கள். சுற்றுலா ஈர்ப்பு காரணமாக இப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் கடுமையாக இருக்கும்.

அதுமட்டுமின்றி இந்த மலைப் பகுதியில் தரைப் பகுதிகளில் பெய்வதை விட மழை மிகவும் அதிகமாகவே பெய்யும். அதன் காரணமாக சாலைகளில் குண்டும் குழியும் மிகவும் அதிக அளவில் இருந்து, அப்பகுதியில் பயணம் மேற்கொள்வது என்பதே மிகவும் சிரமமாக இருக்கும்.

இது தொடர்பாக சென்னையில் உள்ள தேசிய நெடுஞ்சாலைத் துறை முதன்மை பொறியாளர் ஒன்றிய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்துக்கு எழுதியுள்ள கடித நகலையும் இத்துடன் தங்கள் பார்வைக்கு இணைத்துள்ளேன்.

எனவே அந்த சாலையின் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு தேவையான தொழில் நுட்ப மற்றும் நிர்வாக ஒப்புதலை வழங்கி, அத்திட்டத்திற்கான ரூ.8698.88 லட்சம் தொகையை ஒதுக்கீடு செய்ய தேவையான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஆ.ராசா ஒன்றிய அமைச்சரிடம் வலியுறுத்தி கடிதம் அளித்தார்.

